
# இன்பநாதம்



அமரர்

## தாமு பேரின்பநாதன்

22.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்வாயைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு.தாமு பேரின்பநாதன் அவர்களின்

# நினைவுமலர்

22.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தில் அச்சாணியாக அல்லும் பகலும் எமக்காக உழைத்த எம் தெய்வமே! இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ அன்பைச் சொரிந்து உறவுகள் பேணி, நானிலத்திலே நம்மையும் ஒரு மனிதராய்ப் பண்படுத்தி, வாழ்க்கைக்கோர் அர்த்தத்தைக் கற்பித்து, இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களில் இந்தப் புனித மலரினை சமர்ப்பணம் செய்து வணங்குகிறோம்.!



**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



**தோற்றம்**
**15.10.1941**

**மறைவு**
**13.01.2018**

## அமரர்

# தாமு பேரின்பநாதன்

**அவர்கள்**

## திதிநிர்ணய வெண்பா

ஆண்டு ஏ விளம்பி மார்கழி யபரபக்கம்
பூண்ட துவாதசித் திதியதனில் - நீடுபுகழ்
பார்போற்றும் பேரின்ப நாதப் பெருந்தகை
சேர்ந்தார் சிவனடியே தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலடி மேவிடும் ஐங்கரனே

அருள்வாயயே என்றும் துணை நீயே!

அல்வாய் ஆலடி மேவிடும் ஐங்கரனே!

நீல கண்டனின் மகனே நின்மலசொரூபனே

நினைத்த பொழுதில் நீ வாராயே

(அல்வாய்)

நீர்க்குமிழ் போன்ற வாழ்க்கயிலே நின்று

நெஞ்சந்தடுமாறி நினை மறந்தேனே

ஆரெமெக்கு இன்று ஆறுதலை அளிப்பார்

அல்வாய்ப் பதிதனக்கு அருள்மணியே

(அல்வாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறைபோலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் துவெண் மதிசூடி
காடுடைய மலராள் பொடிபூசியென் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலராள் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மாள் இவளன்றோ

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம ளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரம்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருவகில்
ஊரம் உலகுங்கழற வுளறி உமைமணவாளனுக்காள்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துரேறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பாதிமதிநதி போதுமணிசடை
நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறவருள்
மாயனரி திரு மருகோனே
காலனெனை யணு காமலுன திரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயினில் ஏறிய மரர்கள்
சூழ வலம் வரும் இளையோனே
சூதமிக வளர்சோலை மருவு
சுவாமி மலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவலப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா உயிர்கள் வாழ்க
நான்மறை அரங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தாமு பேரின்பநாதன் வாழ்வியல் நோக்கு

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பிரதேசத்தில் கல்வி பொருளாதாரம், கலை, விளையாட்டு என்பவற்றில் மேம்பட்டிருந்த சிறு கிராமமான அல்வாயில் கொக்கட்டியாவளவு எனும் குறிச்சியில் தாமு பொன்னம்மா தம்பதியினருக்கு இளைய புதல்வராக 15.10.1941 ஆம் ஆண்டில் பேரின்பநாதன் பிறந்தார். சிவபாக்கியம், வீரசிங்கம், சிந்தாமணி, தங்கம்மா, அம்பிகாவதி ஆகியோரின் பாசமிகு தம்பியாகவும் தவநாயகியின் செல்ல அண்ணனாகவும் ஒரு கொடியில் பூத்த ஏழு மலர்களாக வாழ்ந்தார்கள். சகோரதரர்கள் வழிவந்த மைத்துணர்களான அப்பையா, கதிரவேலு, இராசேந்திரம், கணேசன், செல்லத்தம்பி மைத்துணியான தெய்வநாயகி ஆகியோர் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார். அவர்களும் அமரர் அவர்களை மைத்துணனாக கருதாது தமது பிள்ளைபோலவே கருதிவந்தனர். மேலும் அமரர் அவர்கள் தனது தந்தைவழி உறவுகளுடனும், தாய்வழி உறவுகளுடனும், உரிமையுடனும், பாசத்துடனும் பழகிவந்தனர். இளமையில் வறுமை வாட்டியபோதிலும் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்ததுடன் "பிச்சை புகுனும் கற்கை நன்றே" என்பதை வேதமாகக் கொண்டு கல்வியில் உயர்ந்து அதன்வழி பொருளீட்டி செம்மையான வாழ்வு வாழ்ந்து மடிந்தவரே அமரர் அவர்கள்.

அமரர் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை யா/ தேவரையாளி இந்துக்கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியினை கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியிலும், உயர்கல்வியை நெல்லியடி மத்தியகல்லூரி மற்றும் ஸ்கந்தவரோதயாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியிலும் கற்றார். கணிதத்துறையில் சிறந்த பெறு பேற்றினைப் பெற்று கட்டுப்பெத்த தொழில்நுட்பக்கல்லூரியில் படித்து J.T.O (கனிஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்)பட்டத்தை பெற்றுக்கொண்டதுடன் நின்றுவிடாது இலண்டனை தலைமையாகக் கொண்ட இலங்கை பொறியியல் நிறுவனத்தின் ஊடாக குடிசார் பொறியியலாளராக (Civil Engineer) தன்னை உயர்த்திக்கொண்டார். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது திறமையால் தன்னை ஒரு பொறியியலாளனாக உயர்த்தியமை மூலம் எமது கிராமத்திற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். அல்வாய் கிராமத்தில் முதல் பொறியியலாளர் என்ற பெருமைக்குரியவரும் இவரே ஆவார்.

பாடசாலைக்காலங்களில் சிறந்த தடகளவீரனாக திகழ்ந்த இவர் நெல்லியடி மத்திய கல்லூரியில் கற்ற காலப்பகுதியில் உயரம் பாய்தல் போட்டியில் தேசியமட்டத்தில் பங்குபற்றி வெற்றி பெற்றதுடன் இவருடைய சாதனை பதிவு (Record) நீண்டகாலமாக உடைக்கப்படாமலும் இருந்துள்ளது. பாடசாலை உதைபந்தாட்ட அணி, அல்வாய் மனோகரா உதைபந்தாட்ட அணி என்பவற்றில் சிறந்த வீரனாக இருந்ததோடு கழகத்தின் வளர்ச்சிக்கும் பலவழிகளில் பங்காற்றினார். மனோகரா சனசமூகநிலையத்தின் வளர்ச்சிக்காக நண்பர்களுடன் சேர்ந்து பல வழிகளில் உதவினார். அத்துடன் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் மீது அளவற்ற அன்பு கொண்டவராகவும் ஆலயத்தின் வளர்ச்சிக்கு தன்னுடைய அறிவுசார், நிதிசார் பங்களிப்பையும் வழங்கினார்.

இவருடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் இவரது சகோதரரான தாமு வீரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)ஆவார். எமது கிராமத்தில் முதல்முதலாக ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர் நியமனத்தைப் பெற்றவர். எதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாத தீர்க்கமான மனம் கொண்ட இவர் இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து வருகின்றார். இவருடைய வழிகாட்டலும் ஆலோசனைகளும் அமரர் அவர்களின் உயர் கல்வியில் பெருஞ்செல்வாக்குச் செலுத்தியது. அமரர் அவர்களுக்கு அண்ணனாக இராது தந்தைபோல் இருந்து வழிகாட்டினார்.

அமரர் அவர்கள் கல்வி கற்பதற்குரிய பௌதீகச் சூழலாக அமைந்த இடம் இவருடைய சிறிய தந்தையான வைத்திலிங்கம் என்பவரது வீடாகும். "பன்னாம்பத்தை" என அழைக்கப்படும் குறிச்சியில் அமைந்த அவரது வீட்டில் இருந்தே அமரர் அவர்கள் தனது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார் என்பதையும் இங்கு கூறுவது சிறப்பாகும்.

திருமணவயது வந்தபோது அவருக்கு பல இடங்களிலும் பெண் கொடுக்க தயாராக இருந்தபோதிலும் சகோதரர்களின் விருப்பபடி சுன்னாகம் சூராவத்தையைச்சேர்ந்தவரும் புகழ்பெற்ற கற்பொழிவு சிற்பாச்சியாரியராகவும் விளங்கிய இராசசிங்கம் பிள்ளையம்மாவின் ஏக புதல்வியான லோகேஸ்வரியைத் திருமணம் புரிந்தார். இவர் புகுந்த குடும்பமும் அப்பகுதியில் பொருளாதாரம், கல்வி, கலை என்பவற்றில் மேலோங்கியிருந்த குடும்பமாகும். இவர் மனைவியின் தாய் வழி ஒன்றுவிட்ட சகோதரர் பெரும் மேடை, வானொலி நாடக கலைஞர் (நடிகமணி வி.வி.வைரமுத்து ) என்பது குறிப்பிடத்தக்கது. அமரரின் துணைவியான லோகேஸ்வரி அவர்கள் பெற்றோருக்கு ஒரே ஒரு மகளாக இருந்தவர்.மிகுந்த செல்வச் செழிப்போடு செல்லமாக வளர்க்கப்பட்டவர் அவ்வாறிருந்தும் தனது கணவன் வழி உறவுகளுடன் நல்லுறவைப்பேணி அவர்களின் சுகதுக்கங்களில் கலந்துகொண்டு கணவனின் எண்ணப்படி வாழ்ந்தவராவார்.

பேரின்பநாதன் லோகேஸ்வரி இருவரும் இல்லறம் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் ஓம்ப உயர்ந்த வாழ்க்கை நடாத்தி இன்புற்றனர். இல்லற வாழ்வின் பயனாக 1971ம் ஆண்டு பெண்மகவு ஒன்றைப்பெற்றெடுத்து "திலகா" என பெயர்சூட்டி மகிழ்ந்தபோது ஒரு வாரம்தான் அக்குழந்தை உயிரோடிருந்தது. கொடுத்தவனே பறித்துக்கொண்டான். அக்குழந்தையின் நினைவுகள் அமரர் அவர்களின் இறுதிக்காலம் வரையும் தொடர்ந்திருந்தது. அதன் பின்னர் 1972ம் ஆண்டில் சிவலோஜினியையும், 1976இல் பத்மலோஜினியையும் பெற்றெடுத்தனர். இவர்கள் இருவரையும் சிறுவயதிலிருந்தே கண்ணும் கருத்துமாக காத்து சீருடனும் சிறப்புடனும் வளர்த்து வந்தார்கள்.உரிய பருவங்களில் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை உரிய முறையில் ஊரார் வியக்கும் வண்ணம் செய்து முடித்தார்கள். இளையமகள் பத்மலோஜினியை கணிதத்துறையில் கற்க வைத்து பேருவுகை அடைந்தார். அதன் வழி அவரை ஒரு அரச பணியாளராக உருவாக்கினார். திருமணப்பருவம் எய்தியதும் காரை நகரைச் சேர்ந்த தேவராசா, தயாநிதி தம்பதியினரின் ஏகபுதல்வன் புலேந்திரகுமார் அவர்களை கரம்பிடித்துக்கொடுத்தார். இவர் ஒரு விஞ்ஞானபட்டதாரி ஆசிரியராவார். அத்துடன் அமரரின் வழிநடத்தலில் படவரைகலையில் அதிகாரம் பெற்று அமரருடன் சேர்ந்து பல கட்டடங்களுக்கு திட்டப்படம் தயாரித்துக்கொடுத்தார். அமரருடன் இறுதிவரை கூடவே இருந்து அவரின் இன்பதுன்பங்களை தனதாக ஏற்று நல்ல "மகனாக" துணைநின்றார். அமரர் நோய்வாய்ப்பட்டிருந்த நேரங்களில் அவருக்கு உறுதுணையாகவிருந்து தனது கடமைகளைச் சரிவரச்செய்தவர்.

புலேந்திரகுமார் பத்மலோஜினி தம்பதியினருக்கு இரு பிள்ளைகள். மூத்தவர் பிரிதிவன், இளையவர் டர்சிகன் இவர்கள் இருவர் மீதும் அமரர் அளவுகடந்த பாசம்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மகவு இல்லை என்ற குறை பேரன்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு அவர்களின் பின்காலத்திற்கும் தனது கடமையைச் செவ்வனவே செய்தும் வைத்துள்ளார்.

## தொழில்

1965 காலப்பகுதியில் கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரியில் படித்து முடிந்த பின்னர் 1966-1968 காலப்பகுதியில் புத்தளம் கட்டிட மேற்பார்வையாளராக கடமையாற்றினார். அதனைத்தொடரந்து தான் கற்ற கல்வியை அனைவருக்கும் பகிரவேண்டும் என்ற எண்ணத்தோடு அம்பாறையில் அமைந்துள்ள கார்டி (Hardi) தொழில்நுட்பக்கல்லூரியில் போதனாசிரியராக இரண்டு ஆண்டுகள் கடமையாற்றினார். அதன்பின்னர் பூகொட ஆடை உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் தொழில்நுட்ப பொறுப் பதிகாரியாக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றி பின்னர் 1977ம் ஆண்டு இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தில் "உதவிப்பொறியியலாளராக" நியமனம் பெற்று தனது சேவையை திறம்பட மேற்கொண்டு வந்தார். 1988ம் ஆண்டு "சிரேஸ்ட பொறியியலாளராக" பதவியுயர்வு பெற்றுக் கொண்டதோடு தொடர்ந்து அவரின் சேவையினால் 2001ம் ஆண்டு தலைமைக் காரியாலயத்தின் தொழில்நுட்ப பிரிவின் "பிரதிப்பொது முகாமையாளராகவும்" உச்ச நிலை பதிவைத்தனதாக்கி 2002ல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். ஓய்வின் பின்னரும் தனது சொந்த முயற்சியினால் ATP கட்டட ஒப்பந்தகாரர் எனும் தனியார் நிறுவனத்தை நிறுவி யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### குணாதிசயம்

இவரது சேவை காலத்தின் பெரும்பகுதி கொழும்பை மையமாகக் கொண்டிருந்ததால் சகோதரமொழி மக்களுடன் நல்லுறவைப் பேணிவந்தார். இலங்கை வங்கியின் உயர் மட்ட அதிகாரிகள் பலரும் இவரின் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். மேலதிகாரியாக பதவி நிலையில் உயர்ந்தபோதிலும் தனக்கு கீழே பணியாற்றியாற்றியவர்களுடன் சுமூகமான உறவைப் பேணினார். இதனால் கிளைமுகாமையாளர்கள், ஊழியர்கள் அனைவரும் இவர் மீது அளவு கடந்த மதிப்பைக் கொண்டிருந்தனர். "பதவி வரும்போது பணிவு வரவேண்டும்" என்பதனை அமரரின் நடத்தைகளில் மிகத்தெளிவாகக் கண்டுகொள்ளலாம். இந்த வகையில் அவர் ஒரு மேன்மகனாகவே வாழ்ந்தவர்.

#### சமயப்பணிகள்

அல்வாய் சாமணந்துறை பாலகணபதியின் சப்பறத் திருவிழா அங்கத்தவராக இருந்து அந்தத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கி வந்தார். அத்துடன் பாலகணபதிக்கு கொடித்தம்பத்தை தனது அண்ணன் குடும்பத்தோடு சேர்ந்து அமைதததுக்கொடுத்தார். மிக அண்மையில் அமைக்கப்ட்ட பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான திட்டப்படம் வரைந்தமை, கட்டிட மேற்பார்வை மேற்கொண்டமை அதேபோல் தேர் ஆரோகண மண்படபத்திற்கான திட்டப்படம், மேற்பார்வை என்பவற்றைச் சிறப்பாகச் செய்தார்.

இவ்வாறு தான் பிறந்த ஊருக்கு மாத்திரமின்றி தனது புகுந்த இடத்தின் ஆலய வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பினை வழங்கினார். அறுமன்கலட்டி ஞானவைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பொருளாராகப் பலகாலம் பணியாற்றினார். அவ்வாறே கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் ஆலோசகர், பொருளாளர், உபதலைவர் என பல பதவிகளை வகித்து கோபுரம் கட்டுவதற்கு திட்டப்படம் வரைந்து, கட்டிட மேற்பார்வையும் செய்து தொண்டாற்றினார். இவர் செய்த முதல்கோபுர தொண்டும் இதுவே ஆகும். இதேபோல் உடுவில் பிரதேச சபையின் வயோதிபர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து சிறப்பாகப்பணியாற்றினார்.

அமரர் அவர்கள் தனது சகோதரர்கள் மீது மிகவும் பாசம் கொண்டவராகவும் மட்டுமன்றி அவர்களின் பிள்ளைகள் அவர்தம் பிள்ளைகள் மீதும் அளவு கடந்த பாசத்துடன் பழகியவர். ஆவர்களின் கல்வி வளர்ச்சி, பொருளாதார மேமப்பாடு குறித்து மிகவும் அக்கறைகொண்டு அவர்களை ஊக்குவித்தும் வந்தார். “ஐயையா” என்றும் “சின்னமாமா” என்றும் “சின்னதாத்தா” என்றும் அவர்கள் அழைப்பது ஒரு மந்திர உச்சாணமே.

அமரரின் பாசச்சிறைக்குள் கட்டுண்டு இவர்கள் காணப்படுவது அமரரின் இயல்பை துலாம்பரமாக எடுத்தியம்பி நிற்கிறது. அத்தோடு தனது தந்தைவழி தாய்வழி உறவுகளைப் பேணி அவர்களின் இன்பதுன்பங்களில் பங்குகொள்ளும் இயல்பு ஆனது பிறந்த ஊரின் மீதான பற்று, சமூகம் பற்றிய பரந்த சிந்தனை என்பனவும் இவரின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். இதேபோல் புகுந்த இடத்திலும் தனது மனைவி வழி உறவுகளுடன் உரிமையுடனும், பாசத்துடனும் பழகியவர். ஆவர்களின் இன்பதுன்பங்களில் முன்னின்று செயற்பட்டவர். அங்குள்ள பலர் இவரை “மாமா” என்று அழைத்துக்கொள்வர். மேலும் இவர் தன்மனைவியின் மைத்துணன் பிள்ளைகளை தன் பிள்ளைகள் போல் உரிமையுடன் பழகி வந்தார். இதை உணர்த்த அமரரின் இறுதி நிகழ்வின்போது உற்றார், உறவுகள் சிந்திய கண்ணீர் துளிகள் அமரர்மீது அவர்கள் கொண்ட இணையில்லா அன்பின் வெளிப்பாடே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் முனைந்துவிட்டால் முடியாதது என எதுவும் இல்லை என்பதை அமரர் அவர்கள் தன் வாழ்வு மூலம் நிரூபித்திருக்கின்றார். முன்னேற்றத்துக்கு வறுமை ஒரு தடையல்ல. முன்னேற விரும்புபவன் ஊக்கம் எனும் ஆயுதம் கொண்டு வறுமை எனும் தடையை உடைத்தெறியவேண்டும். கல்வியால் குடும்பச்சூழல், சமூகம் என்பவற்றை மாற்றி அமைக்கலாம் என்பதை தன் வாழிவின் மூலம் நிருபித்துக் காட்டினார்.

சிறியவர், பெரியவர் என்ற பேதமின்றி அனைவரையும் மதிக்கும் தன்மை, கர்வமற்ற கனிவான பேச்சு, இரக்க சுபாவம், உறவுகளைப்பேணுதல் பணிவு போன்ற நற்பண்புகளைக் கொண்ட அமரர் அவர்கள் இறுதிக் காலங்களில் நோய் காரணமாக சிறு துன்பத்திற்கு ஆளாகினார். இருந்தாலும், "கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு" என்ற மூதுரைக்கேற்ப இவருடைய மகிமை இறுதிவரை குறையாது இருந்தது. "மரணம்" என்பது எவராலும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது. ஆயினும் தவிர்க்கப்படமுடியாது. கூட இருப்பவர்களுக்கு மரணம் என்பது பெரும் துன்பத்தைக் கொடுத்தபோதிலும், வாழ்வாங்கு வாழ்ந்து மரணிப்பவர்களுக்கு மரணம் என்பது ஒரு விடுதலையே. ஆம் அமரர் தாமு பேரின்பநாதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து 13.01.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்".**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியர் கௌரவிப்பின் போது....



மனோகரா உதைபந்தாட்ட விளையாட்டுக் குழுவினருடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரின்பத்தை இழந்துவிட்டோம்

யாருடன் உறவாடினாலும் நட்புக்கொண்டாடினாலும் அவர்கள் அனைவருக்கும் ஆனந்தத்தையும் பேரின்பத்தையும் மட்டுமே வழங்கிய ஒரு ஆத்மா மறைந்துவிட்டது. ஆம் நாம் ஒரு பேரின்பத்தை இழந்துவிட்டோம். சிலர் மறைந்தபின் பிள்ளைகள் மற்றும் துணைகளின் மனதில் மட்டுமே வாழ்வார்கள் சிலர் அவர்கள் உறவினர்கள் மனதிலேயும் வாழ்வார்கள் ஆனால் ஒரு சிலரே அந்த அமரருடன் பழகிய எல்லோர் மனதிலேயும் வாழ்வார்கள். அப்படிப்பட்ட ஓர் அற்புத ஆத்மா தான்மறைந்தும் எமது மனதுகளில் வாழும் அமரர் பேரின்பநாதன் அவர்கள்.

அவர் ஒரு பொறியியலாளர். வங்கியின் கடடடப்பகுதிக்கு அவர் பொறியியலாளராக நியமனம் பெறமுன்பு வேறு இரண்டு நிறுவனங்களில் அவர் சேவையாற்றியதாகப் பின்னர்தான் அறிந்தேன். அவரது திட்டமிடுதலில் கட்டப்பட்ட மற்றும் சீரமைக்கப்பட்ட வங்கிக் கட்டிடங்கள் இலங்கையில் பல பாகங்களிலும் இன்றும் அவர் பெயரை மௌனமாகத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. நான் கொழும்பில் கடமையாற்றும் போதுதான் இலங்கை வங்கித் தலைமையகத்தில் அவரைச் சந்தித்தேன். சிலரைச் சந்தித்த கணத்திலேயே அவர்மீது நாம் மாறாத நட்பைக் கொண்டுவிடுவோம். அந்தமாதிரி உத்தியோக ரீதியாக நாம் சந்தித்த அதே கணம் நல்ல நண்பர்களாகவும் மாறிவிட்டோம். அன்றிலிருந்து அவர் அமரராகும் வரை எமது நட்பு தொய்வுறாமல் தொடர்ந்து வந்திருக்கிறது. வங்கி வட்டாரத்தில் பெரி (Peri) என்ற பெயரில் எமது சகோதர மொழிபேசுபவர்களாலும் எம்மாலும் அன்போடு அழைக்கப்பட்ட ஒரு உன்னதமான மனிதனை இன்று இழந்துவிட்டுத் துயரத்தைச் சுமந்து கொண்டிருக்கிறோம்.

எனது அஞ்சலி உரையில் ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் அவரது விருந்தோம்பல் தன்மையால் கவரப்பட்டாதவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கமுடியாது. அதே போல் அவருக்கு வாய்த்த துணைவியாரும் அந்த இயல்பில் மேம்பட்டுக் காணப்பட்டது அவர் செய்த பாக்கியமாகும். அவர் வீட்டுக்கு வருபவர் யாராக இருந்தாலும் அவரது இயல்புகளினால் கவரப்பட்டு மனம் நிறைந்துதான் அவரது வீட்டிலிருந்து வெளியேறுவர். ஒருவரையும் மனம் நோக விடமாட்டார்: இறைபக்தி மிகுந்தவர் அவரது சொந்த ஊரான அல்வாயில் அவர் செய்த ஆலயத் திருப்பணிகள் என்றும் அவர் பெயரைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். "பகைவருக்கும் அருள்வாய்" என்ற திருவாக்குக்கமைய நடந்ததால் அவருக்கு எதிரிகளே இல்லை. எனது மூதாதையர்கள் சிலர் சொல்வார்கள் நல்லவர்களை இறைவன் சீக்கிரமே அழைத்துக் கொள்வான் என்று. அப்படித்தான் இவர் விஷயத்திலும் நடந்திருக்கும் என நான் நம்புகின்றேன்.

அவரது பிரிவின் சோகம் அவரது குடும்ப உறுப்பினர்களின் மனதிலிருந்து, ஏன் நண்பர்கள் மனதிலிருந்தும் கூட மறைய பல நாட்களாகலாம். ஆனாலும் உலக நியதிப்படி காலம் மனங்களை மாற்றும். அதுதான் இறைவன் மனிதனுக்குக் கொடுத்த ஒரு வரம் என்றும் கூறலாம். இல்லையேல் இந்த உலகத்தில் சோகத்தைத் தவிர வேறு ஒன்றும் இருக்காது.

உலகில் துணையை இழக்கும் துயரம் சாமான்யமானது அல்ல. ஆனாலும் காலம் நிச்சயமாக அதை ஆற்றும். அமரரின் ஆசைப்படி அவர் சந்ததிகள் மிகப்பெரும் புகழோடு இந்த மண்ணில் வாழ்வார்கள் என்று நான் ஆணித்தரமாக நம்புவதோடு இறைவனையும் பிரார்த்திக்கிறேன். அதற்கமைய அவர்கள் எல்லோருடைய வாழ்வும் அமைய மீண்டும் இறைவனிடம் இறைஞ்சி நிற்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**க.பாலசுப்பிரமணியம்**
**முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்**
**இலங்கை வங்கி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்வாய் ஆலடி பாலகணபதியின் ஆலய கட்டுமாண, உட்கட்டுமாண பணிகளுக்குப் மெருகூட்டிய பொறியியலாளர்**

# அமரர் தாமு பேரின்பநாதன்.

ஆலடியான் வாசலிலே கண்ணெதிரே தென்படுகின்ற பஞ்சதள இராஜகோபுரமும் தேர் ஆரோகண மண்டபமும் அமரர் அவர்களை நினைவுபடுத்துகின்றன. தேர் ஆரோகண மண்டபத்தின் சகலவிதமான கட்டுமாணப் பணிகளையும் பொறுப்பெடுத்து, அதனை அழகுற கட்டியும் பொறியியல் நுட்பங்களை துல்லியமாகக் கவனித்துத்தந்தவர் அமரர் அவர்களே!. அதுமட்டுமன்றி தன்னிடமுள்ள தொழில்சார் வளங்களையும் பயன்படுத்தி தெய்வீகக் கலையம்சம் மிளிரவும் செய்தவரும் இவரே! பிரதிபலன்களை எதிர்பாராவண்ணம் செய்தும் தந்தவர். ஆலடியான் மண்ணில் பிறந்த அந்த உரிமையுடன் மட்டுமன்றி எமது ஆலய சப்பற திருவிழா உபயகாரர் என்ற வகையிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர் என்ற வகையில் தேர் ஆரோகண மண்டபத்தை அமைத்து உபகரித்தவன் என்ற வகையில் நானும் எனது குடும்பமும் மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

மேலும் எமது ஆலயத்திற்கு ஒரு பஞ்சதள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமானது எமது சபையினரால் நிறைவேற்றப்பட்டபோது தானாகவே முன்வந்து அதற்கான சகலவிதமான ஆலோசனைகளையும் வழங்கியதோடு மட்டுமல்லாமல் அதை நிர்மாணிப்பதற்கு மிகவும் பொருத்தமானவர் யாரென்பதை நற்குணர்ந்து அந்த குழவினரை எமக்கு ஒப்பந்தம் செய்து தந்து அதை தெய்வீகக் களையோடு நிறைவேற பெரிதும் பாடுபட்டதோடு மட்டுமல்லாமல் அடிக்கடி நேரில் வந்து பார்வை செய்தும் ஆலோசனைகளையும் வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர். அத்தோடு நின்றுவிடாமல் உட்கட்டுமானப் பணிகளிலும் அக்கறையுடன் செயல்பட்டு மகாகும்பாபிஷேகம் நிறைவேறும் பட்சத்தில் அதைக் காணுமுன் இறையடி சேர்ந்துவிட்டார். இவரின் பணிகளின் பெருமைகளையும், உதவிகளையும் இவ்வருட கும்பாபிஷேக காலத்தில் அனைவராலும் நினைவு கூரப்பட்டது. அவரின் இழப்பு எமது கிராமத்திற்கும் எமது ஆலயத் திருப்பணிகளுக்கும் இனிவரும் காலங்களில் ஒரு பெரிய வெற்றிடமாகும். இவரின் ஆத்மா சாந்தியடைய ஆலடியான் பாதங்களை வேண்டுவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**உங்கள் திருப்பணிகளை என்றும் மறவாத**
**கதிர்காமநாதனும் மனைவி உமாவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி பேரின்பம்

"பிறப்பவர் எல்லாம் இறப்பவர் எனினும் சிறப்புயர்வுற்றோர் சிந்தையில் இருப்பர்" என்ற ஆன்றோர் நற்சிந்தனைக்கிணங்க எனக்குப் புகுந்த வீட்டுத்தம்பியாகிய அமரர் தா. பேரின்பநாதன் என்றென்றும் மறக்க முடியாதவர் அவரது தூய்மையான எண்ணமும் மற்றவர்களுக்கு பயன்படும் வாழ்வும் மனிதருள் மாணிக்கமாக்கியது. இவர் தனது பிறந்த ஊருக்கு மட்டுமல்ல புகுந்த ஊருக்கும் இவரது தூய சிந்தனையின் மூலம் உதித்த நல்ல பல செயற்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி செயற்பட்டவர். இவர் புகுந்த வீட்டின் உற்றார் உறவினர்களை எவ்வித பாகுபாடுமின்றி அன்பும் கருணையும் ஆதரவையும் வழங்கி தனது சொந்தச் சகோதரர்களாகவே கருதி வாழ்ந்தவர். இவர் தனது தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் பெற்று இலங்கை வங்கியின் பொறியியல் வல்லுனராக உயர் பதவி வகுத்து உண்மை நேர்மை கடைப்பிடித்து தான் சார்ந்த இனத்திற்கு மட்டுமல் சகோதர இனமத மக்களுக்கும் ஒரே சமனாக அரும்பெரும் சேவையாற்றியவர். இவர் பல்லோரும் போற்றும் வண்ணம் தன் வாழ்நாளில் வாழ்ந்து காட்டினார் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

இத்தகைய நற்குண நற்செய்கைகளுடைய ஒருவரை நாம் இழந்து விட்டாலும் அவர் என்றென்றும் எம் சிந்தையில் இருப்பார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**கலாபூசணம் [மிருதங்கம்],**
**பிள்ளைநாயகம் திருநாவுக்கரசு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புடன் நாலு வரிகள்

காலக்கண்ணாடியில் கோல விழிகளால்
கடந்த காலத்தை கடைந்து பார்க்கையில்
எண்ணக் கருவில் எழுகின்ற நினைவில்
எழுதும் மடலிது வற்றாத நீரூற்றாய்
வழுவாத நட்புடன் வாழ்ந்து வந்தோமே
இனியவுன் முகமும் இன்சுவப் பேச்சும்
இன்றுவரை அகன்றிட இதயம் மறப்பதும்
என்னென்று சொல்ல எழுத்தில் அடங்காதே!

அன்புடன் கலந்த வங்கியாளர் வாழ்வில்
ஆண்டுபல கடந்தும் அவனியில் வாழ்வீர்
கலையாத கல்வியால் கட்டிட கலையில்
தொலைதூர நோக்கில் தொண்டுகள் புரிந்தீர்
மலையளவு சேவை மண்ணிலே கண்டோம்
ஊரார் வணங்கிட கோபுரத் திருப்பணியில்
உயர்ந்த உள்ளம் காட்டிய உத்தமரே
ஊனுடம்பு அழிந்தும் உண்மையில் வாழ்வீரே!

கண்டவுடன் கேட்பீர் புதினம் என்வென்று
உண்டென்று சொல்ல நீயிங்கு இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் அடிதனை அடைந்த நண்பா
அல்லல்கள் அறுத்திட அவனடி பணிந்து
நல்லதே செய்திடுவீர் நம்தமிழர் நலம்பெற
வாக்குக் கேட்டவர் வருடங்கள் கழிந்ததும்
வருவார் வம்சங்கள் வாழ்ந்திட மீண்டும்
தருவார் நம்பிக்கையோ தண்ணீரில் எழுதி!

கடல்நடுவே திசைமாறி போனாலும் ஒருநாள்
கரைசேர வாய்ப்புண்டு ஆனாலும் இதுநாள்
வரைநம் நிலைகண்டு மாறாத அரசு – ஊழல்
யந்திரமாய் பழுதின்றி பயணிப்பதை பார்த்திட
தந்திரமாய் வல்லரசுகள் முதலிட்டு ஈழமதை
கூறாக்கி மெல்லவே கபளீகரம் செய்வதை
அறியாத அரசு எமக்கு மட்டும் உரிமைதர
மறுக்கிறது ஈசனிடம் எடுத்துரைப்பாய்

நட்புடன்
அன்பு நண்பன்,
எஸ். நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Mr. Thamu Perinpanathan – A Man of Excellence and integrity*

It is an honour to write this tribute to Mr. Thamu Perinpanathan, retired Chief Enginner at the Bank of Ceylon.

Mr. Perinpanathan was a dedicated worker, a good administrator, a loving husband, a pillar of strength to his children, a role made to his grandchildren and a friend to all. I came to know him in the early 2000s when the ATP constructions, a company owned by him, was entrusted with the task of building the 'Page Memorial' block at Chundikuli Girls' College. I found him to be an energetic and truthful person who was committed to work. His ideas were very practical. Even after the building was completed in 2004, he remained associated with the school until his demise last month.

Mr. Perinpanathan lived a great life filled with happiness and contentment. He was very fond of his grandchildren who were blessed to have him holding their hands and guiding them in every step they took. When he was confined to home due to his illness, his family tendered him with love and care. But suffering was too much for him to bear. God who saw him suffer decided to call him home.

"When someone becomes a memory, that memory becomes a treasure"

May God give his family the courage to bear this irreplaceable loss.

'Death is to the Body, whereas Sprit is Eternal'

**Mrs. D. Thuseetharan,**
**Principal,**
**Chundikuli Girls' College, Jaffna**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பா

Peri என்று என்னால் செல்லமாக அழைக்கப்படும் - என்
அன்புள்ள அப்பாவே - நான்
மண்ணில் தவழ்வதற்கு உயிர்
கொடுத்தாய் - நீ
குழந்தை பருவத்தில் - நற்
தந்தையும் ஆனாய்
பள்ளிப்பருவத்தில் நல்
ஆசானும் ஆனாய் - உற்ற
நண்பனாய் அறிவுரையும்
தந்து உறவினர் - மத்தியில்
பண்புடன் பழகவும் வைத்தாய்
இளமைப்பருவத்தில் தாயாகி
சமையலும் கற்றுக்கொடுத்தாய்
மணம்முடிக்கும் வயதில் ஏற்ற
மணாளனையும் தந்தாய் - இரு
குழந்தைகளின் தாயானபோது – அன்புப்
பேரனும் ஆனாய் - சோறூட்டினாய்
தாலாட்டினாய் சீராட்டினாய் - நற்
பண்பும் சொல்லிக்கொடுத்தாய்
இத்தனையும் தந்தாய் - உன்
செல்ல மகளுக்கு – ஆனால்
மீளாத்துயில் கொண்டு மீளாத்
துயரில் ஆக்கியும்விட்டாயே– அப்பா

**உன்நினைவில் வாழும்**
**உன் செல்ல மகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அலைகள்

**மனைவி**

தாரமாய் ஏற்ற நாள் முதல்
இன்று வரை உம் அன்பு
குறையவே இல்லை.
செல்லப் பிள்ளையான என்னை
மனைவியாக மட்டுமன்றி – உம்
மகளாகவே என்னையும் - சிறப்புடன்
வாழவைத்திர் மண்ணில்
பொன்னகையாலும் புன்னகையாலும்
அழகுபடுத்தி சந்தோசம் கண்டீர் - எம்
வாழ்வு வசந்தமாக நகர்ந்தது – போதுமென்று
காலன் எண்ணினான் போலும் - உம்மை
என்னிடமிருந்து பிரித்துவிட்டானே

**மூத்த மகள்**

மகளாய் பிறந்தேன் - அப்பா
மகனாய் ராசன் என்று – பெயர்
சூட்டி மகிழ்ந்தாய் - குறைவில்லா
செல்வத்தோடு வாழவைத்தாய் - நீ
நோயுற்றிருந்த போது அருகே – எனை
இருத்தி பணிவிடை செய்யவும் வைத்தாய்
அகலவிடாமல் எனை அடிக்கடி அழைப்பாயே
சொல்லாமல் அகன்று விட்டாயே
எனை விட்டு

**மருமகன்**

மருமகனாக காலடி எடுத்து வைத்தேன்
மகனாக ஏற்றுக்கொண்டாய்
தாயாகி விதவித சமையலும்
ருசியுடன் செய்து தந்தாய்
படவரைகலையில் ஊக்குவித்து – கட்டிட
படவரைஞர் ஆக்கி மகிழ்ந்தாய்
வலது கரமாக துணை நின்று
இறுதிவரை கையெழுத்தும் இட்டாய் - அன்று
உன் அன்புமழையில் நனைந்தேன் - இன்று
என் கண்ணீர் மழையில் நனைகிறேன்

**பேரப்பிள்ளைகள்**

அம்மப்பா என்றால் - எமக்கு
தெரிவது பாசம்
பெற்றோருடன் இருந்த
நேரத்தைவிட உம்மோடு இருந்த
நேரமே அதிகம் - கல்வியில்
உயர ஊக்கம் தந்தீர்
சிங்கள, ஆங்கிலம் கற்றிட
அருகிருந்து வழிகாட்டினீர்
எம்மோடு மழலையாய் - மாறி
எம்மை மகிழ்ச்சியின் உச்சிக்கே
கொண்டு சென்றீர் - ஆனால்
திடீரென்று எம்மை சோகத்தில்
ஆழ்த்திவிட்டீர் - என்செய்வோம்
உம்மை என்றும் மறவா
நினைவுடன் நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் ஒலித்திடும் பேரின்பநாதம்

உடன்பிறவாச் சகோதரன் பாசமிகு சி. மகேஸ்வரன் குடும்பத்தினரின் ஆற்றொணாத் துயரலைகளும் ஆன்மசாந்திப் பிரார்த்தனையும்.

எனது உடன் பிறவாச் சகோதரன். பாசமிகு அமரர் தாமு பேரின்பநாதன் அவர்கள் இறை ஐக்கியம் அடைந்த செய்தியைச் செவியுற்று நாமும் எமது குடும்பத்தவர்களும் ஆழ்ந்த மனக்கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அன்பும், பண்பும், சாந்தமும், இறைபக்தியும், பிறர்க்கு உதவும் தன்மையும் உறவினர்களை மதிக்கும் பண்பும், சூழ்ந்த கல்வி அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற அமரர் அவர்களின் பிரிவு எமது உள்ளத்தை நெகிழ வைத்துள்ளது. அமரர் அவர்கள் உயர்ந்த பண்பாளனாக வாழந்து எமது சமூகத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்ததை நாம் என்றும் மறக்கமுடியாது.

எனது பிள்ளைகளையும் தனது பிள்ளைகள் போல் நினைத்து தனக்கு பிள்ளைகள் இருவர் அல்ல ஐவர் என்றே கருதி வாழந்தவர் அமரர். கொழும்பிலிருந்து விடுமுறையில் வீடு வரும்போது தனது வீட்டிற்கு எனது பிள்ளைகளையும் அழைத்து ஐவரையும் ஒன்றாக இருத்தி சோறூட்டி மகிழ்வார். இது அவரின் பரந்த மனப்பாங்கை எடுத்துக்காட்டுகிறது. என் பிள்ளைகளுக்கு கணிதப் பாடமும் சொல்லிக்கொடுப்பார். எனது பிள்ளைகளும் அவரிடம் விருப்பமாக கற்றுக்கொண்டனர்.

எமது குடும்பநிகழ்வுகள் அனைத்திலும் கலந்து ஒரு சிறந்த சகோதரனாக நன்றே செய்யும் நண்பனாக, நல்லாலோசனை வழங்கும் நல்லாசானாக விளங்கி நமக்குப் பல வழிகளிலும் பேருதவி புரிந்த பெருந்தகை என்றும் எம் நெஞ்சத்தில் நீங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவிடத்தைப் பெற்றுக்கொண்டார். எமது மூத்தமகன் அமரர் மங்களேஸ்வரன் அவர்கள் கொழும்பு வைத்தியசாலையில் நோயுற்றிருந்தவேளையில் அங்கே வருகை தந்து சகலவழிகளிலும் எமக்கு உதவியமை அவர் எமக்காற்றிய சேவைகளுக்கெல்லாம் கிரீடம் வைத்தாற்போல் அமைந்து எமது உள்ளத்தில் அவர்பால் பெரும் மதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமரர் அவர்கள் தமது இல்லறவாழ்வில் தமக்கு விதிக்கப்பட்ட இல்லறக் கடமைகளை இனிது நிறைவு செய்து இன்று சாளம்பை உறையும் வேற்பெருமானுடன் இரண்டறக் கலந்து வானுறையும் தெய்வமாகிவிட்டார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

**சி. மகேஸ்வரன்**
**குடும்பத்தினர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டைக்காடு மல்லாம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம்.

கோட்டைக்காடு மல்லாம் சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலய பரிபாலசபை உறுப்பனரும், முன்னாள் உபதலைவர், செயலாளருமான அமரர் தாமு பேரின்பாதன் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

அன்னார் எமது ஆலயத்தின் வளர்ச்சிக்காக செய்த பணிகள் அளப்பரியன. ஆலய தேர்க் கொட்டகையின் இருபக்க தகர மறைப்புக்களையும், தேர்முட்டிக்கான படிகளையும் தன்னுடைய சொந்த செலவிலேயே செய்து ஒப்பேற்றிய பெருமை அவரையே சாரும். அத்தோடு ஆலய முகப்பு கோபுரப் பணியின்போது தன் நோயையும், நேரத்தையும் பாராது அல்லும்பகலும் உழைத்து முன்னின்று செயற்பட்ட பெருமைக்குரியவர். அவரது முயற்சியால் ஆலய கோபுரம் சாளம்பை முருகனின் முகப்பில் ஓங்கி நிற்கின்றது.



அன்னாரின் முயற்சியால் அமைக்கப்பெற்ற சாளம்பை வேலன் இராஜகோபுரம்

ஆலயத்தின் பிரதான உற்சவங்களில் ஒன்றான மகா சிவராத்திரி 2ம் சாம பூஜையும், ஆடிமாமுதற் செவ்வாய் உபயமும் அன்னாரும் அவர்தம் குடும்பமும் செய்துவந்தனர். அன்னார் இவ்வுலகைவிட்டு நீங்கினாலும், அவரது குடும்பத்தினர் இவ்வுபயங்களை ஏற்றுச் செய்வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் எமது ஆலய விசேட பூஜை தினங்களில் கலந்து சிறப்பிப்பதுடன், ஆலய வளர்ச்சியில் அக்கறையோடு செயற்பட்டவர். எத்தனையோ விடயங்களில் ஆலோசனை வழங்கிய பெருமைக்குரியவர். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சாளம் வேலனின் பாதங்களை வேண்டிநிற்கின்றோம்.

**திருமதி ஸ்ரீமுருகானந்தபவா யோகாம்பிகை,**
**தலைவர்,**
**சாளம்பை முருகன் தேவஸ்தானம்**
**கோட்டைக்காடு,**
**மல்லாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டியாவளவுக்கோமகன்

கல்வியின் உறைவிடமாய்காசினியில் விளங்கிடும்

அல்வையம்பதிதனில் கொடிகட்டிப்பறக்குமெங்கள்

கொக்கட்டியாவளவுக் கோமகனாய் திகழ்ந்தே

திக்கெட்டும் புகழ்பூத்த பொறியியலாளனாய்

பேரின்ப நாதனெனும் பெருமகனாய் வாழ்ந்த எங்கள்

சிரிப்பழகா! சின்னமாமா (நீங்கள்) விண்ணுக்கு விரைந்த

சேதி கேட்டகணம் தொட்டு, நானாக நானில்லை மாமா!

அந்த நாள் ஞாபக அலைகளோ என் ஆழ்மனதில்

ஆயிரமாய் மோதியெனை நிலைகுலைய வைத்திடுதே!

ஆமாம்!........................

அந்த எழுதுபதுகளில் ...................

சிறுவயதில் சிறியேன் நான்

வறுமையில் வாடியபோது

"யாமிருக்கப்பயமேன்?" என

எந்தனுக்கு

அபயக்கரம் நீட்டிய

ஆறுமுகக்கடவுள் அல்லவா நீங்கள்

தென்னிலங்கை தன்னில் பொறியியலாளனாய்

நீங்கள்..........

கண்ணியமாய் பதவி வகித்தது வந்தவேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மரு(று)மகனாய் எனை மதித்தே
மாதாந்தம் "நாற்பது ரூபாய்க்கு" மணியோடர்
அனுப்பியே எந்தன் கல்விக்கு வித்திட்டாய்!
எந்தன்................
ஆங்கில அறிவை ஓங்க வைத்திட
சிறுவயதில் (நீ) பட்ட கஷ்டங்கள்தனை விளக்கி
ஆங்கில மடல் ஆயிரம் அனுப்பி வைப்பாயே!
முன்பின் வந்தறியா கொழும்புமா நகரில்
நேர்முகப்பரீட்சைகளுக்கு (நான்) வந்த போதெல்லாம்
தங்க இடம்தந்து தாய்போல் அரவணைத்து
"வாழ்த்துகள்" கூறியெனை வழியனுப்பி வைப்பாயே
எண்பத்தொன்று டிசெம்பரில் ................
மட்டு நகர் பல்கலைக் கழகத்தில் எந்தனுக்கு
முதல் அரசபதவி நியமனம் கிடைத்தபோது
ஆனந்தக் கூத்தாடி அடியேனை வரவழைத்து
தெல்லிப்பழை துர்க்கா தேவியவள் சந்நிதானத்திற்கு
"அத்தம்மா" சகிதம் உந்தன் புதுக்காரில்
எனையழைத்துச் சென்றே அபிஷேகம் செய்வித்து
என் உச்சி மோந்து ஆசீர்வாதங்கள் தந்த
எந்தன் ஏந்தல் அல்லவா நீங்கள்!
பட்டதாரியாகி நான் பல்கலையில் உயர்பதவி
வகிந்திருந்த நாட்களில் மனமுவந்து வாழ்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தவன் நீ!
தொண்ணூற்றெட்டு பெப்ரவரியில்............
சர்வதேச லயன்ஸ் கழகப் புலமைப்பரிசில் பெற்று
இவன்........
தென்கிழக்காசிய செயலமர்வுக்கென
இந்தியாசென்று (நாடு) திரும்பியபோது
அரசபடைகளெனைச் சந்தேகக்கண்கொண்டு
கைதுசெய்து (காவலில்) வைந்திருந்த வேளைதனில்,
சேதிகேட்டு பதைபதைத்து ஓடிவந்தென்னை
மீட்டுச் சென்றே உங்களுடன் கூட்டிச்சென்ற
அந்த.......
நாளை இந்த ஏழை
எப்படித்தான் நான் மறப்பேன்?
கடந்தவாரம்,
சிறுநீர் ரகங்களிரண்டும் செயலிழந்த பின்னர்
வைத்திய சாலையும் (உங்களைக்) கைவிட்ட பின்னர்
"அப்பாவை வீட்டிற்கு கொண்டு போகின்றோம்,
பேச்சு மூச்சில்லை"
என்ற, எனதன்பு மைத்துணி பவுணனின்
தொலைபேசி செய்திகேட்டதும்,
பதைபதைத்து ஓடோடி வந்துங்கள் பாதம்
பணிந்தே உங்கள் காதோரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னமாமா", "சின்னமாமா" என

நான் ...............

அழுதபடி கூவியழைக்க ............

அதுவரையிலும் ...... கண்மூடிக்கிடந்த நீங்கள்

திடீரெனக் கண்விழித்தே, எனைப் பார்த்து

ஏதோ சொல்லத்துடித்தீர்களே!

அதன்பின்னர்,

என்கையால் "தெளிவு நீர்" உங்களுக்கு ஊட்டிய

ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி

இங்கு நான் திரும்பிவந்தேன்

பவுணனிடம் உங்கள் நலம்கேட்டு

தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன்

தைப்பொங்கல் திருநாளாம் இன்றெனக்கு பவுணன்

"எமைவிட்டு அப்பா போய்விட்டார்!" என்றே

தொலைபேசி மூலம் அழுதபடி அறிவித்தார்

சிரிப்பழகா! சின்னமாமா! உங்கள் புனித ஆத்மா


ஆலடியான திருவடியில் சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

பாசமிகு மருமகன்
**இரா. இராஜேஸ்வரன்,**
**ஓய்வுநிலை உதவிப்பதிவாளர்,**
**[களனிப்பல்கலைக்கழகம்]**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1




2




3

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 |
| 27 | 38 | ? |

4

1 + 5 = 12

2 + 10 = 24

3 + 15 = 36

5 + 25 = ?

5

6 + 4 = 210

9 + 2 = 711

8 + 5 = 313


5 + 2 =37

7 + 6 = 113

9 + 8 = 117

10 + 6 = ?

6






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 9 x 1 | = | ↓ | 09 |
| 9 x 2 | = | | 18 |
| 9 x 3 | = | | 27 |
| 9 x 4 | = | | 36 |
| 9 x 5 | = | | 45 |
| 9 x 6 | = | | 54 |
| 9 x 7 | = | | 63 |
| 9 x 8 | = | | 72 |
| 9 x 9 | = | | 81 |
| 9 x 10 | = | | 90 ↑ |

**விடைகள்**

1. 25
2. 5(9 -4)
3. 51 (6 x 9 = 54 - 3)
4. 416 (10 -6 =4) (10 + 6 =16)
5. 30(90 -(20 + 40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியலின் பிரிவுகள் தந்தை

ஜனநாயகத்தின் தந்தை பெரிக்ளிஸ்
இயற்பியலின் தந்தை நியூட்டன்
வேதியியலின் தந்தை இராபர்ட் பாயில்
தாவரவியலின் தந்தை தியோபிராச்டஸ்
விலங்கியலின் தந்தை அரிஸ்டாட்டில்
கணிப்பொறியின் தந்தை சார்லஸ் பேபேஜ்
பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித்
இந்திய மறுமலர்ச்சியின் தந்தை ராஜாராம் மோகன்ராய்
வரலாற்றின் தந்தை ஹெரடோடஸ்
வகைப்பாட்டியலின் தந்தை கார்ல் லின்னேயஸ்
மரபியலின் தந்தை கிரிகர் கோகன் மெண்டல்
புவியலின் தந்தை தாலமி
ஹோமியோபதியின் தந்தை சாமுவேல் ஹானிமன்
நவீன இயற்பியலின் தந்தை ஐன்ஸ்டீன்
நவீன வேதியியலின் தந்தை லாவாயசியர்
அறிவியல் நாவல்களின் தந்தை வெர்னே
தொலைபேசியின் தந்தை கிரகாம்ப்பெல்
பசுமைப்புரட்சியின் தந்தை நார்மன் போர்லாக்
ரயில்வேயின் தந்தை ஜார்ஜ் ஸ்டீவன்சன்
நவீன மரபியலின் தந்தை வு .ர் . மார்கன்
செல்போனின் தந்தை மார்டின் கூப்பர்
மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரேட்டஸ்
சமூகவியலின் தந்தை அகஸ்டஸ் காம்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண் உயரியியலின் தந்தை ஆண்டன் வான் லூவன் ஹாக்
ஜியோமிதியின் தந்தை யூக்லிட்
சுற்றுச் சூழலியலின் தந்தை எர்னஸ்ட் ஹேக்கல்
அட்சுக்கூடத்தின் தந்தை கூடன்பர்க்
சுற்றுலாவின் தந்தை தாமஸ் குக்
தொல் உயரியியலின் தந்தை சார்லஸ் குவியர்
அரசியல் தத்துவத்தின் தந்தை பிளேட்டோ
அணுக்கரு இயற்பியலின் தந்தை எர்னஸ்ட் ஷெருதர்போர்ட்
அறுவை சிகிச்சையின் தந்தை சுஸ்ருதர்
இன்டர்நெட்டின் தந்தை விண்டேன் சர்ப்
ஆயுர்வேதத்தின் தந்தை தன்வந்திரி
மனோதத்துவத்தின் தந்தை சிக்மண்ட் பிரைடு
உருது இலக்கியத்தின் தந்தை அமீர் குஸ்ரு
கூட்டுறவு அமைப்பின் தந்தை இராபர்ட் ஓவன்
மின் அஞ்சலின் தந்தை ரே டொமில்சன்
தத்துவ சிந்தனையின் தந்தை சாக்ரடிஸ்
குளோனிங்கின் தந்தை இயான் வில்முட்
நோய் தடுப்பியலின் தந்தை எட்வர்ட் ஜென்னர்
ஆங்கிலக் கவிதையின் தந்தை ஜியாப்ரி சாசர்
நகைச்சுவையின் தந்தை அறிச்டோபேனஸ்
துப்பறியும் நாவல்களின் தந்தை எட்கர் ஆலன்போ
கணித அறிவியலின் தந்தை பிதாகரஸ்
ஆசிய விளையாட்டின் தந்தை குருதத் சுவாதி
சட்டத்துறையின் தந்தை ஜெராமி பென்தம்
அரசியல் அறிவியலின் தந்தை அரிஸ்டாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரின்ப விருட்சம்

- தாமு + பொன்னம்மா
  - சிவபாக்கியம்
  - வீரசிங்கம்
  - சிந்தாமணி
  - தங்கம்மா
  - அம்பிகாவதி
  - பேரின்பநாதன்
  - தவநாயகி
- இராசசிங்கம் + பிள்ளையம்
  - லோகேஸ்வரி

- பேரின்பநாதன் + லோகேஸ்வரி
  - திலகா(அமரர்)
  - சிவலோஜினி
  - பத்மலோஜினி + புலேந்திரகுமார்
    - பிரிதிவன்
    - டர்சிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தலைவர் அமரர் தாமு பேரின்பநாதன் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியைக் கேட்டு உடன் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் தொலைபேசி, முகப்புத்தகம், ஊடாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் அன்னார் நோயுற்ற வேளையில் வைத்திய உதவிகள் புரிந்த யாழ்போதனா வைத்தியசாலை வைத்தியவர்கள், ஊழியர்கள் மற்றும் வீட்டிற்கு வருகைதந்து வைத்திய உதவிகளை வழங்கிய டாக்டர் திரு. ஈ.சுந்தரேஸ்வரன், திரு.சுரேந்திரன், திரு. விமலேந்திரன் ஆகியோருக்கும் அன்னார் நோயுற்ற வேளை தினமும் வீட்டிலும், வைத்திய சாலையிலும் நின்று உதவிசெய்த செல்வலிங்கம் உமாதேவன், உமாசுதன் ஆகியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அஞ்சலி பிரசுரங்கள் மலர் வளையங்களை வெளியிட்டோருக்கும், நினைவு மலருக்கான ஆக்கங்களை தந்துதவிய பெருந்தகைகளுக்கும், இம் மலரினை அழகுற அச்சிட்ட ஸ்ரீ மாருதி பதிப்பகத்தாருக்கும், அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதியபோசன விருந்தில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்குதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்.

'இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்'

**பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org